செ.வெ.எண்: 233/2017 நாள்: 25.03.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் அவர்கள் முன்னிலையில், 1,420 ஏழை பெண்களுக்கு 5.680 கி.கிராம் தங்கம் மற்றும் ரூ. 6 கோடியே 12 இலட்சத்திற்கான திருமண நிதியுதவிகளை (இசிஎஸ் மூலம் வங்கியில் செலுத்தப்பட்டது) இன்று (25.03.2017) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் அவர்கள் முன்னிலையில், சமூக நலத்துறையின் மூலம், திருமாங்கல்யத்திற்கு தங்கம் மற்றும் திருமண நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், பட்டதாரி அல்லாத 392 ஏழை பெண்களும், 1,028 பட்டதாரி ஏழை பெண்களும் என மொத்தம் 1,420 ஏழை பெண்களுக்கு 5.680 கி.கிராம் தங்கம் மற்றும் ரூ. 6 கோடியே 12 இலட்சத்திற்கான திருமண நிதியுதவிகள் (இசிஎஸ் மூலம் வங்கியில் செலுத்தப்பட்டது) மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (25.03.2017) நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

நிகழ்ச்சியில், தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவுத் தலைவர் திரு.எம்.சேவியர் மனோகரன், மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி. பேச்சியம்மாள், திரு. நாஞ்சில் சந்திரன், திரு. ரஜீஸ்ராஜ், திரு. தாணுபிள்ளை, திரு. கனகராஜன், திரு. சந்தையடி பாலகிருஷ்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. நாஞ்சில் ஏ. முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.